

புதுதில்லியில், நேற்று முன்தினம் (02.12.2024) ஒன்றிய நிதித்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களை தமிழ்நாடு அரசின் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் சந்தித்து, ஒன்றிய அரசு கடந்த ஆண்டு ஜல் ஜீவன் இயக்கத்திற்கு (JAL JEEVAN MISSION) ஒதுக்கீடு செய்த நிதியில் கடந்த ஆண்டு வரை வழங்க வேண்டிய நிலுவைத் தொகை, இந்த நிதி ஆண்டிற்கு வழங்க வேண்டிய தொகை மற்றும் இத்திட்டத்தினை 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிப்பு செய்வது தொடர்பாக விவாதித்தார். இச்சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, திருச்சி என்.சிவா, டி.எம்.செல்வகணபதி, அருண் நேரு, டி.மலையரசன், எ.மணி, கணபதி ப.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ் விஜயன், நகராட்சி நிர்வாக துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் புதுதில்லியில் ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர்லால் கட்டார் அவர்களை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். (100 cities programme for sustainable urban development initiatives) 100 நகரங்களின் தமிழ்நாடு மாநிலத்திற்கு 15 நகரங்களை ஒதுக்கீடு செய்யுமாறு கோரிக்கை விடுத்தார். இந்நிகழ்வின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் உள்ளிட்ட நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள், நகராட்சி நிர்வாக துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.



புதுதில்லியில் நேற்று முன்தினம் (02.12.2024) நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள நிதி அமைச்சர் அலுவலகத்தில் ஒன்றிய நிதித் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மரியாதை நிமித்தம் சந்தித்தார். இச்சந்திப்பின் போது தமிழ்நாடு அரசின் வணிகவரித் துறை முதன்மைச் செயலாளர் பிஜேந்திர நவநீத், தமிழ்நாடு அரசின் நிதித் துறை துணைச் செயலாளர் பிரத்தீக் தயாள், ஆகியோர் உடனிருந்தனர்.

### சவால்களைக் கடந்து வெல்வது மாற்றுத்திறனாளிகளின் சாதனை;

# அந்தச் சவால்களைக் களைவதே நம் கடமை!

## உலக மாற்றுத்திறனாளிகளின் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி!

சென்னை, டிச. 4-

உலக மாற்றுத்திற னாளிகளின் நாளை யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் “சவால்களைக் கடந்து வெல்வது மாற்றுத்திற னாளிகளின் சாதனை; அந்தச் சவால்களைக் களைவதே நம் கடமை” என்று கூறியுள்ளார்.

உலக மாற்றுத்திற னாளிகள் நாளை யொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

அனைவரையும் உள்ளடக்கிய எதிர் காலத்துக்கு மாற்றுத்திற னாளிகளின் தலைமைத் துவத்தை ஊக்குவிக்க வேண்டும் என்பதை இந்த ஆண்டுக்கான உலக மாற்றுத்திறனாளி கள் நாள் கருப்பொரு ளாக ஐக்கிய நாடுகளின் சபை அறிவித்துள்ளது!

அந்த வகையில், மாற்றுத்திறனாளர் களின் உரிமைகளை யும் நலனையும் காப்ப துடன், அவர்கள் உயர் பதவிகளுக்குச் செல்ல வேண்டும், நல்ல வேலைவாய்ப்புகளைப் பெற வேண்டும் என்பதி லும் அக்கறை கொண்டு செயலாற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு.

சவால்களைக் கடந்து வெல்வது மாற்றுத்திற னாளிகளின் சாதனை; அந்தச் சவால்களைக் களைவதே நம் கடமை!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் தமது சமூக வலை தளப் பதிவில் கூறி யுள்ளார்.




சிவகங்கையில் நடைபெற்ற அகில இந்திய மாற்றுத் திறனாளிகள் நலத் திட்டத்தினை முன்னிட்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், எம்.எல்.ஏ.க்கள் திருமதி தமிழரசிரவிக்குமார், எஸ்.மாங்குடி, நகர் மன்றத் தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் ஆகியோர் கலந்து கொண்டார்.



தேனி வடக்கு மாவட்டம்போடி நகர செயலாளர் ஆர்.புருஷோத்தமன் ஏற்பாட்டில் மாநில கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் எம்.பி. வழங் கினார். உடன் செயற்குழு உறுப்பினர் சங்கர் பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ் மாவட்ட பிரதி நிதிகள் பஷீர், முருகேசன், நகர அவைத் தலை வர் சின்னத்துரை, உத்தமபாளையம் முன் னாள் ஒன்றிய செயலாளர் முல்லை சேகர், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் ராஜசேகர், நகர மன்ற உறுப்பி னர் வெங்கடேஷ், குமார் மற்றும் கழக முன் னோடிகள் கலந்து கொண்டனர்.

